## சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் - வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தில் விவசாயிகளின் நிதிச்சுமையினை குறைத்து, அதிக எண்ணிக்கையில் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், இயந்திரங்களுக்கான மொத்தத் தொகையை விவசாயிகள் செலுத்துவதற்குப் பதிலாக, மானியம் போக விவசாயிகளின் பங்களிப்புத் தொகையினை மட்டும் செலுத்துவது – செயலாக்க நெறிமுறையில் மாறுதல் செய்து அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மை - உழவர் நலத் (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண்.154. நாள் 17.07.2023

சோபகிருது வருடம், ஆடி 1

திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டவை:

1) வேளாண்மை இயந்திரமயமாக்குதல் துணை இயக்க வழிகாட்டு நெறிமுறைகள் – 2020-2021
2) தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடித எண். வேஇ.1/21496/2023, நாள்: 19.05.2023.

....

**ஆணை:**

கிராமங்களில் நிலவிவரும் பண்ணை ஆட்கள் பற்றாக்குறையால் குறித்த காலத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்ள இயலாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் பண்ணை ஆட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, உரிய நேரத்தில் விவசாயிகள் வேளாண் பணிகளை மேற்கொண்டு, பயிர்களில் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு வேளாண் இயந்திரமயமாக்கலை பெருமளவில் ஊக்குவித்து வருகிறது.

2. வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், டிராக்டர், பவர்டில்லர், சுழற்கலப்பை, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், வைக்கோல் கட்டும் கருவி போன்ற பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், தனிப்பட்ட சிறு, குறு, பெண், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியத்திலும் வழங்கப்படுகின்றன.

3. தற்போது, வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் மானியத்தில் வேளாண்மை இயந்திரங்களை பெறுவதற்கு, வேளாண் இயந்திரங்களுக்கான முழுத் தொகையினையும் அதாவது மானியத் தொகையையும், விவசாயிகளின் பங்களிப்புத் தொகையினையும் சேர்த்து செலுத்தி, இயந்திரங்களை வாங்கிய பின்பு, விவசாயிகளுக்கு மானியம் பின்னேற்பாக வழங்கப்படுகிறது. இதனால், விவசாயிகள், குறிப்பாக சிறு, குறு விவசாயிகள் அதிக விலை கொடுத்து, மானியத்தில் வேளாண் இயந்திரங்களைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.

மேலும், இந்த மொத்தத் தொகையினை வங்கிகளில் கடனாக பெறுவதிலும் வங்கிகளில் சிக்கலான நடைமுறைகளினால் காலதாமதம் ஆகிறது. அப்படியே, வங்கிக்கடன் பெற்றாலும், மானியத்திற்கும் சேர்த்து விவசாயிகள் வட்டித்தொகையினை செலுத்த வேண்டியுள்ளது.

மேலும், சிறு, குறு விவசாயிகள் வேளாண் இயந்திரங்களுக்காகும் மொத்தத் தொகையினை திரட்டுவதற்கு காலதாமதமாகும் நிலையில், திட்ட வழிகாட்டுதலின்படி, வசதியுள்ள இதர விவசாயிகள் எளிதாக முழுத் தொகையினையும் செலுத்தி, மானியத்தில் வேளாண் இயந்திரங்களை பெற வாய்ப்புள்ளது. இதனால், வசதி குறைந்த, ஏழை, எளிய விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெறுவது அவர்களுக்கு எட்டாக்கனியாகவே இருக்கிறது.

இதன் விவரங்கள் பின்வருமாறு :-

i. டிராக்டருக்கான தோராயமான விலை ரூ.9 முதல் 10 இலட்சம் மற்றும் பவர் டில்லருக்கான தோராயமான விலை ரூ.2.5 இலட்சம் முதல் 3.0 இலட்சம் வரை ஆகும். தற்சமயம் வேளாண் இயந்திரங்கள் / கருவிகளுக்கான முழுத்தொகையினை விவசாயிகள் செலுத்திய பின்னர்

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வழங்கல் ஆணை (supply order) வழங்கப்படுகிறது.

ii. டிராக்டர், அறுவடை இயந்திரங்கள் மற்றும் டிரெய்லர் போன்ற வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாங்கி, போக்குவரத்துத் துறையில் பதிவு செய்த பிறகுதான், இயந்திரங்களுக்கான மானியத் தொகையானது, விவசாயிகளுக்கு, பின்னேற்பு மானியமாக அவர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படுகிறது.

iii. இதன் காரணமாக, விவசாயிகள், குறிப்பாக சிறு, குறு விவசாயிகளுக்கு இயந்திரங்களுக்கான மானிய தொகை, விவசாயிகளின் பங்களிப்புத் தொகையினை சேர்த்து, முழுத்தொகையினையும் முன்கூட்டியே செலுத்துவது மிகவும் கடினமாக உள்ளது. வங்கிக் கடனுக்காக, வங்கியை அணுகும் போது, வங்கிகளின் சிக்கலான வழிமுறைகளால் குறிப்பிட்ட நேரத்தில் வங்கிக் கடன் கிடைப்பதில் தாமதமாகிறது.

iv. இவ்வகையான, கடினமான வழிமுறைகளை விவசாயிகள் சந்திப்பதால், இயந்திரத்திற்கான தேவை அதிகமாக இருப்பினும் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால், வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்கும் மாநிலத்தின் முயற்சி தொய்வடைகிறது.

v. மேலும், நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில், விவசாயிகள் பங்களிப்புத் தொகை மட்டுமே செலுத்தப்பட்டு, மானியமானது நுண்ணீர்ப் பாசனக் கருவிகள் தயாரிக்கும் நிறுவனத்திற்கே செலுத்தப்படுவதால், விவசாயிகள் சிரமமின்றி, தங்களது பங்குத் தொகையினை செலுத்தி, திட்டப்பலனை காலதாமதமின்றி அடைய முடிகிறது.

vi. வேளாண் பணிகளுக்கு தற்போது நிலவிவரும் பணியாட்களின் பற்றாக்குறையைப் போக்க, வேளாண் இயந்திரமயமாக்கல் இன்றியமையாதது. இதனால் வழிமுறைகளை மாற்றி, மானியமானது நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு செலுத்துவது போல், நேரடியாக வேளாண் இயந்திரங்கள் மற்றும்

கருவிகள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அல்லது விநியோகஸ்தர்களுக்கு அல்லது முகவர்களுக்கு செலுத்தினால் விவசாயிகள் தங்களது பங்களிப்புத் தொகையினை மட்டுமே செலுத்தினால் போதும். இதனால், சிறு, குறு விவசாயிகள், அதிக எண்ணிக்கையில் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் பயனடைவதோடு, வேளாண் இயந்திரமயமாக்குதலின் முழுமையான நோக்கமும் ஏற்றதாழ்வின்றி, நிறைவேறும். அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின் பலன்கள் சென்றடைந்து, உள்ளடக்கிய வளர்ச்சி (Inclusive Development) உறுதி செய்யப்படும்.

4. எனவே, தற்போதுள்ள நடைமுறையை மாற்றி விவசாயிகளின் பங்களிப்புத் தொகையை (அதாவது இயந்திரங்களுக்கான மொத்த தொகையிலிருந்து மானியத் தொகையை கழித்து மீதமுள்ள தொகை) மட்டும் செலுத்தும் நடைமுறையைக் கடைபிடிக்கலாம் என தலைமைப்பொறியாளர் (வேளாண் பொறியியல்) பார்வையில் இரண்டில் கண்ட கருத்துருவில் கோரியுள்ளதை கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, அரசு பின்வரும் இனங்களுக்கு ஆணையிடுகிறது:-

i. *அதிக எண்ணிக்கையில் சிறு, குறு விவசாயிகள், ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகள் பயனடையும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் பெறும்போது, பயனாளிகள் தங்களது பங்களிப்புத் தொகையினை மட்டும் செலுத்திடவும், மானியத் தொகையை வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு / விநியோகஸ்தர்களுக்கு / முகவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நேரடியாக செலுத்தவும், அனுமதி வழங்கி, வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்ட செயலாக்க நெறிமுறைகளில் உரிய மாற்றம் கொண்டு வரப்படுகிறது.*

ii. *வேளாண் இயந்திரங்களுக்கான மானியம் பெறுவதற்கு வழிமுறைகள் அனைத்தும் இணையதள வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது. மேலும், ஒப்பளிப்பு வழங்கப்பட்டபின், விவசாயிகள் தங்கள் பங்களிப்புத் தொகையினை அளிக்க தவறுவதையோ அல்லது காலதாமதமாக செலுத்துவதையோ தவிர்க்கும் விதத்தில் தகுந்த செயல்முறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. அவை இவ்வரசாணையின் இணைப்பு I-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

6. இவ்வரசாணையானது நிதித் துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

7. இவ்வரசாணை, வெளியிடப்படும் நாளில் இருந்து அமுலுக்கு வருகிறது. இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்கள் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் தொடர்புடைய அனைத்து இனங்களுக்கும் பொருந்தும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி.சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.
வேளாண்மை ஆணையர், சென்னை -5,
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) (G & SSA), சென்னை – 18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர்
அலுவலகம், (சமுக தணிக்கை பிரிவு) சென்னை-9.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

**நகல்:**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சரின் நேர்முக
உதவியாளர், சென்னை - 9

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் தனிச்செயலாளர், வேளாண்மை- உழவர் நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
நிதி (வே - உ.ந)/ (வசெ2) துறை, சென்னை – 9.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3) துறை, சென்னை – 9.
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத்துறை,
சென்னை- 9.
கோப்பு எண். 1629/வேபொ.1/2023.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – I

## வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானிய விலையில் பெறுவதற்கான திருந்திய வழிமுறைகள்

**(அரசு ஆணை எண் 154, நாள்17.7.2023)**

1. ***இனம் எண். 3 தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட மானியம் வழங்குதல்.***

**வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் செய்தல்**

1. *வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கும் நிறுவனங்களுக்கு வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்க திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படும் அனைத்து வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டங்களுக்காக மாநில மானிய இணையதளம் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறை ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்படும்.*
2. *நிறுவனங்கள் தங்கள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விவரம், அவற்றின் அதிகபட்ச சில்லறை விற்பனை விலையினை (Maximum Retail Price) முகவர்களின் விவரங்களோடு இணையதளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.*
3. *அதிகபட்ச சில்லறை விற்பனை விலை என்பது வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் அடிப்படை விலை, சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் போக்குவரத்து செலவினை உள்ளடக்கியதாகும்.*
4. *இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் பதிவு செய்த முகவர்கள் அதிகபட்ச சில்லறை விற்பனை விலையையோ அல்லது அதற்கும் குறைவாக விவசாயிகளுக்குத் தர சம்மதிக்கும் விற்பனை விலையையோ இணையதளத்தில் பதிவிட வேண்டும்.*
5. *இணையதளத்தில் பதிவு செய்து, சட்ட திட்டங்களுக்கு ஒப்புக் கொண்ட நிறுவனங்கள், முகவர்கள் மற்றும் அவற்றின் அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு வேளாண்மைப் பொறியியல் துறை*

ஒப்புதல் வழங்கும். அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட இயந்திரத்திற்குண்டான அதிகபட்ச சில்லறை விற்பனை விலையானது நிறுவனங்கள் வாரியாக இணையதளத்தில் காண்பிக்கப்படும்.

6. விவசாயிகள் தங்களின் சுய விருப்பத்தின் பேரில் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைத் தேர்வு செய்து மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
7. ஒன்றிய அரசினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஆய்வு மையங்களிலிருந்து பெறப்பட்ட சோதனை அறிக்கை (Test Report) அடிப்படையில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான வகை மற்றும் மாடல்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை ஒப்புதல் வழங்கும்.
8. டிராக்டர், பவர் டில்லர், நெல் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மாடல்களுக்கு ஒன்றிய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு http:farmech.gov.in/LOE.htm என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்ட பட்டியலின்படி வேளாண்மைப் பொறியியல் துறையால் ஒப்புதல் வழங்கப்படும்.
9. இத்திட்டத்தின் கீழ், தலைமைப்பொறியாளர் (வே.பொ) அவர்கள் இயந்திரங்கள் வாரியாக அதிகபட்ச எண்ணிக்கையிலான மாடல்களையும், வேளாண் இயந்திரத் தயாரிப்பாளர்களையும், விநியோகஸ்தர்களையும் அங்கீகரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார். இதன்மூலம், விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப வேளாண் இயந்திரத் தயாரிப்பாளர்களையும், இயந்திர மாடல்களையும் தேர்வு செய்து கொள்ள இயலும்.

<u>தகுதி மற்றும் விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ற தேர்வு</u>

1. விவசாயிகள் "உழவன் செயலி"யில் தங்களின் அடிப்படை விவரங்களை அளித்து ஒரு முறை பதிவு செய்தல் வேண்டும்.
2. விவசாயிகள் தங்கள் நிலம் இருக்கும் மாவட்டம், தாலுகா, வட்டாரம், கிராமம், நில அளவை எண் முதலியவற்றை பதிவு செய்து அவர்களின் புகைப்படம், ஆதார் அட்டை, ஆதி திராவிட பழங்குடியினராக இருப்பின் வகுப்புச் சான்றிதழ், சிறு, குறு விவசாயி சான்றிதழ், அடங்கல், பட்டா, நில வரைபடம் மற்றும் வங்கிப்புத்தகத்தின் முதல் பக்க நகல் ஆகியவற்றை பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. தமிழ்நாட்டில் சொந்த நிலமுள்ள அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் மானியத்தில் வாங்கிட தகுதியுடையவர்கள் ஆவர். 'GRAINS' தளத்திலுள்ள எண்ணிக்கைக்கேற்ப அதிகபட்சமான சிறு, குறு விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ், பயனடைவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. வேளாண்மைப் பொறியியல் துறையால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள், கருவிகளைத் தங்களின் சொந்த விருப்பத்தின்படி தேர்வு செய்து கொள்ளலாம்.
5. விவசாயிகள் மானிய விலையில் வேளாண்மை இயந்திரம் அல்லது கருவியினை வாங்கிய பின்னர் அடுத்த 10 ஆண்டுகளுக்கு அதே வேளாண் இயந்திரம் அல்லது கருவியினை மானியவிலையில் வாங்கிட இயலாது.
6. மேலும் ஒரு நிதியாண்டில் ஒரு வேளாண் இயந்திரம் மற்றும் ஒரு கருவியினை மட்டுமே மானியவிலையில் வாங்கிட இயலும்.
7. நிலத்தின் மண்வகை மற்றும் பயிர்சாகுபடிக்கேற்றவாறு, வேளாண் இயந்திரங்களின் வகை மற்றும் தேவைப்படும் குதிரைத்திறன் ஆகியவற்றை தேர்வு செய்வதில் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவார்கள்.
8. குறிப்பிட்ட பிராண்டு மற்றும் மாடல்களை தேர்வு செய்வது என்பது சம்பந்தப்பட்ட விவசாயிகளின் சுயவிருப்பமாகும்.
9. விவசாயிகள் பதிவு, மாவட்டங்களுக்கு இலக்கு ஒதுக்கீடு, விண்ணப்பத்தினை பரிசீலித்து ஆய்வு செய்தல், வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை ஆய்வு செய்தல், மானியம் விடுவிப்பு போன்ற தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கும் திட்டப்பணிகள் 2023-24 ஆம் ஆண்டிலிருந்து இணையதளம் மூலம் படிப்படியாக செயல்படுத்தப்படும்.
10. பவர் டில்லர், விசை களையெடுக்கும் கருவி, சுழல்கலப்பை, நெல் நாற்று நடும் இயந்திரம், நேரடி நெல் விதைக்கும் கருவி, விதை விதைப்பான், தட்டை வெட்டும் கருவி, புதர் அகற்றும் கருவி முதலான வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கும் திட்டம் இணையதளம் மூலம் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

**நிதி ஒதுக்கீடு**

1. ஒவ்வொரு வேளாண் இயந்திரங்கள், கருவிகளுக்கான இலக்கு தலைமைப் பொறியாளரால் (வேளாண்மைப் பொறியியல்), மாவட்டங்களுக்கு பிரித்து பதிவேற்றம் செய்யப்படும். பின்னர் செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) வட்டாரங்களுக்கு பிரித்தளிப்பார். அதன்பின்னர், இவ்விலக்கினை உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / உதவிப்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கிராமங்களின் உள்ள விவசாயிகளுக்கு தேவை அடிப்படையில் வழங்குவார்கள்.
2. வேளாண் இயந்திரங்கள், கருவிகளுக்கான இலக்கு செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) வழியாக உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)களுக்கு வழங்கப்படும்.
3. அரசாணையின்படியும், மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் வகை (ஆதி திராவிடர் / பழங்குடியினர் / இதர வகை)யின் அடிப்படையிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தில் மாவட்ட அளவிலான இலக்கு நிர்ணயம் செய்யப்படும்.

**பயனாளி பணம் செலுத்தும் முறை :**

1. வட்டாரங்களுக்கு வேளாண் இயந்திரங்கள் / கருவிகளுக்கான இலக்கு மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன், உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / இளநிலைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)கள் பதிவு செய்து, இயந்திர ஒதுக்கீடு பெற்ற விவசாயிகளின் நிலப்பதிவேடு மற்றும் இதர ஆவணங்களைச் சரிபார்த்து மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் / கருவிகள் பெறுவதற்கான தகுதியை சரிபார்க்க வேண்டும்.
2. பயனாளிகளின் தகுதியை உறுதி செய்த பிறகு, விவசாயிகள் 15 நாட்களுக்குள் முகவரை தேர்ந்தெடுத்து பங்களிப்புத் தொகையினை செலுத்தி இயந்திரத்தை பெறுமாறு அறிவுறுத்தி அவரது கைபேசிக்கு செய்தி அனுப்பிட வேண்டும்.
3. தவறினால் அந்த இயந்திரம், காத்திருப்புப் பட்டியலிலுள்ள அடுத்த விவசாயிக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கு முடியும் வரை இந்த செயல்முறை தொடரும்.

4. வேளாண் இயந்திரங்களின் மொத்த விலையில் மானியம் போக மீதமுள்ள பயனாளியின் பங்களிப்புத் தொகையினை மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதும்.
   a. ஆதிதிராவிட, பழங்குடியினத்தைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் பயனாளிகளாக இருந்தால், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் துணை இயக்கத்தில் வழங்கப்படும் 50 சதவிகித மானியத்துடன், மாநில நிதியிலிருந்து கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. எனவே, ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகள் 70 சத மானியத் தொகை போக, மீதமுள்ள 30 சதவிகிதத் தொகையினை செலுத்தினால் போதுமானது.
5. அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தி நிறுவனம் / விநியோகஸ்தருக்கு / முகவருக்கு வரைவோலை (Demand Draft) அல்லது இணையவழி பணப் பரிவர்த்தனை (RTGS/NEFT) மூலம் விவசாயிகள் தங்கள் பங்களிப்புத் தொகையினை செலுத்தலாம்.

<u>விவசாயிகளிடமிருந்து ஒப்பந்தம் பெறுதல்</u>

1. வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் வாங்கிய நாளிலிருந்து குறைந்தது நான்கு வருடங்களுக்கு விற்காமல், உரிய முறைப்படி பராமரித்து வேளாண்மைப் பணிகளுக்காக பயன்படுத்துவேன் என்ற உறுதிமொழியை ரூ.50/-க்கான நீதிசாரா முத்திரைத்தாளில் விவசாயிகளிடமிருந்து ஒப்பந்தமாக பெற வேண்டும். அதில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை அருகிலுள்ள விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்குவேன் என்றும் குறிப்பிட்டு உறுதிமொழி பெற வேண்டும்.
2. மேலும், இவ்வொப்பந்தத்தில் "எதிர்காலத்தில், மானியத்தில் வழங்கும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் நான்கு வருடங்களுக்குள் விற்பது கண்டறியப்பட்டால், வழங்கப்பட்ட முழு மானியத் தொகையையும் சம்பந்தப்பட்ட பயனாளியோ அல்லது பயனாளி இறந்திருந்தால் சட்டப்பூர்வ வாரிசுதாரரோ திருப்பிச் செலுத்த வேண்டும்." என்றும் குறிப்பிடப்பட வேண்டும்.
3. வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் சோதனைக்கு வரும்போது, மானியத்தில் பெற்ற வேளாண் இயந்திரங்கள் /

கருவிகளைக் காண்பிக்க சம்மதிக்கிறேன் என்றும் குறிப்பிட வேண்டும்,

<u>மானியம் விடுவித்தல்:</u>

1. வேளாண் இயந்திரங்கள் உற்பத்தி நிறுவனங்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் வேளாண் இயந்திரங்கள் / கருவிகளை நல்ல திறனுள்ள நிலையில் விவசாயிகளின் இடத்திலேயே விநியோகிக்க வேண்டும். வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் / கருவிகளின் விலைப்பட்டியலில் இயந்திரத்தின் எஞ்சின் எண், சேஸிஸ் எண், வரிசை எண் மற்றும் விவசாயியின் கையொப்பம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
2. மானியம் விடுவிப்பதற்கு முன்னர், இயந்திரத்தின் எஞ்சின் எண், சேஸிஸ் எண் அல்லது கருவிகளின் வரிசை எண் மற்றும் இயந்திரத்தின் தொழில்நுட்ப விவரங்களை உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ) / உதவி செயற் பொறியாளர் (வே.பொ) சரிபார்க்க வேண்டும்.
3. கள ஆய்வின் போது, இயந்திரத்தில் / கருவியில் பதிவு செய்யப்பட்ட எஞ்சின் எண். சேஸிஸ் எண், வரிசை எண்ணை விலைப்பட்டியலில் உள்ள எண்ணுடன் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
4. மானியத்தில் வழங்கப்பட்ட வேளாண் இயந்திரத்தை சோதனை அறிக்கையில் உள்ள தொழில்நுட்ப விவரங்கள் அடிப்படையில் உள்ளதா என்பதை உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / இளநிலைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)கள் சரிபார்க்க வேண்டும்.
5. மானியத்தை விடுவிப்பதற்கு முன்னால், டிராக்டர் / அறுவடை இயந்திரம் (சக்கர வகை) போன்ற இயந்திரங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, பதிவு எண்ணை டிராக்டர் / அறுவடை இயந்திரத்திற்கு முன்னும் பின்னும் இலக்கத் தகட்டில் எழுதப்பட்டதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
6. மேலும், டிராக்டர் / அறுவடை இயந்திரம் (சக்கர வகை) பதிவு சான்றிதழில் (Registration Certificate) "வேளாண் மானியத்தில் பெற்றது – இதனைப் பதிவு செய்த நாளிலிருந்து 4 ஆண்டுகளுக்கு

பெயர் மாற்றம் செய்ய தடைசெய்யப்படுகிறது” என்ற கூடுதல் விபரமும் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7. வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்தின் மானியமானது PFMS மூலம் அங்கீகரிக்கப்பட்ட வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனம் / விநியோகஸ்தர் / முகவர்களின் வங்கிக் கணக்கிற்கு விடுவிக்கப்பட வேண்டும்.
8. பயனாளிகள் ஆதிதிராவிட, பழங்குடியின சிறு, குறு விவசாயிகளாக இருப்பின், மாநில நிதியிலிருந்து கூடுதலாக 20 சதவிகித மானியத்தொகையினை “ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)” மூலம் பெற்று, சம்பந்தப்பட்ட வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனம் / விநியோகஸ்தர் / முகவர்களின் வங்கிக் கணக்கிற்கு விடுவிக்க வேண்டும்.
9. மானியம் கிடைக்கப்பெற்றதற்குரிய ஒப்புதலை இயந்திர உற்பத்தி நிறுவனம் / விநியோகஸ்தர்கள் / முகவர்களிடமிருந்து பெற்று, கோப்பில் முறையாக பராமரிக்க வேண்டும்.

**சி.சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

17/7/2023

**பிரிவு அலுவலர்.**

17.07.23